**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 189/2016**

Deposition of the witness for Prosecution **PW** 2
Name : மகேஷ்
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (13.10.2025)

A1, A2 present

முதல் விசாரணை

நான் அச்சன்புதுரில் குடியிருந்து இருசக்கர மெக்கானிக் கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 ராமலட்சுமி தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சி வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 04.01.2016 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு ராமலட்சுமி அவரது வீட்டு சுவரை பூசுவதற்காக கொத்தனாரை வரச் சொல்லி வேலை செய்து கொண்டிருக்கும் போது எதிரிகள் இருவரும் அவரது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அவரை பார்த்து அசிங்கமாக பேசினார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் இருவரும் சேலையை பிடித்து இழுத்து ராமலட்சுமியை கீழே தள்ளி , கையால் முதுகில் அடித்தார்கள் என்றால் சரியல்ல. நானும், முத்துக்குமார், பாண்டி ஆகியோர் சத்தம் போடவும் எதிரிகள் ராமலட்சுமியை பார்த்து கொலை மிரட்டல் விடுவித்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.10.13 12:35:25 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 189/2016**

Deposition of the witness for Prosecution **PW** 1
Name : ராமலட்சுமி
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (13.10.2025)

A1, A2 present

<u>முதல் விசாரணை</u>

1. நான் அச்சன்புதுரில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2016 ம் வருடம் ஒருநாள் காலை 10.00 மணிக்கு எங்கள் வீட்டு காம்பவுண்ட் சுவரை பூசுவதற்காக கொத்தனாரை வரச் சொல்லி இருந்தோம். கொத்தனார் வந்ததும் வேலை பார்க்க ஆரம்பித்தார். அப்போது எதிரிகள் இருவரும் எனது வீட்டிற்கு வந்து அத்துமீறி என்னை இருவரும் கையால் முதுகில் குத்தி என்னை அடித்து இம்சை செய்தார்கள். அப்போது அங்கு நின்று கொண்டிருந்த மகேஷ், பாண்டி மற்றும் கொத்தனார் ஆகியோர் சத்தம் போடவும் எதிரிகள் போய்விட்டார்கள். நான் அன்று மாலை 5 மணிக்கு அச்சம்புதூர் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடைய தான். அந்த புகார் மனு அரசு தரப்பு சான்றாவனும் ஒன்றாகும் அச்சம் புதூர் காவல் நிலையத்தில் ஒரு சீட்டு கொடுத்து நான் மருத்துவமனை சென்று தென்காசியில் கிழிச்சை பெற்று இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது வீடு அச்சன்புதுரில் கிழமேல் ஒடுக்கு தெருவில் தெற்கு பார்த்து உள்ளது

என்றால் சரிதான். அந்த வீட்டினை நான் எனது மகள் பெயரில் செட்டில்மெண்ட் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இரண்டாவது எதிரியின் தந்தையும், எனது கணவரும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். எதிரி கணேசமூர்த்தி எனக்கு மருமகன் உறவு முறை வேண்டும் என்றால் சரிதான். ஒண்ணாவது எதிரி அவ்வை செல்வி எனக்கு மகள் உறவு முறை வேண்டும் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் எதிரியின் வீடும், மாவு மில்லும் உள்ளது என்றால் சரிதான். எனக்கும், எதிரிகளுக்கும் எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் சந்து போவதாக இருப்பதால்தான் பிரச்சனை என்றால் சரிதான். அந்த சந்தில் என் வீட்டிற்கு மேற்கு பார்த்து ஒரு வாசல் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் அந்த சந்தில் எதிரிகளின் வீட்டில் கிழக்கு பார்த்து ஒரு வாசல் உள்ளது என்றால் சரிதான். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. எனது இரண்டாவது மகள் தற்போது அம்பாசமுத்திரத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் நடைபெறும் பொழுது எனது மகள் அச்சம் புதூர் காவல் நிலையத்தில் தலை தலைமை காவலராக பணிபுரிந்தார் என்றால் சரிதான்.

ஏற்கனவே இந்த எதிரிகள் மீது அச்சன்புதுர் காவல் நிலையத்தில் 2 முறை புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த இரண்டு முறையும் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யும்போது எனது மகள் அச்சன்புதுர் காவல் நிலையத்தில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். அந்த இரண்டு வழக்குகள் சிசி எண்.279/2014, சிசி 383/2014 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி மீது ஒவ்வொரு புகார் கொடுக்கும்போதும் பொது சந்தில் வானம் தோண்டி சுவர் கட்டப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் எதிரி கணேசமூர்த்தி நான் அத்துமீறி கட்டியுள்ள சுவற்றினை இடிப்பதற்காக இதே நீதிமன்றத்தில் எனது மகள் மீது ஒரு சிவில் வழக்கு அ.வ.எண்.15/2015 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது வீடு எத்தனை பத்தி என்றால் மூன்றுபத்தி வீடு ஆகும். சம்பவம் நடக்கும்போது விசாரணையில் போலீசாரிடம் எனது வீடு மூன்றுபத்தி வீடு என்றும், நான் அப்போது எந்த அறையில் இருந்தேன் என்றும் சொன்னேனா என்றால் சொன்னேன் உள்ளே வந்து அடித்தார்கள். எதிரிகள் வந்து வீட்டில் சத்தம்போட்ட விவரம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது வீட்டிற்கும், அச்சம்புதூர் காவல் நிலையத்திற்கும் ஒரு அரை கிலோமீட்டர் தூரம் இருக்குமா என்றால் இருக்கலாம். அச்சம்புதுர் காவல் நிலையத்திற்கு மேற்கு பக்கம் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை எடுத்துக் கொண்டீர்களா என்றால் தென்காசியில் போய் ஊசி போட்டு வந்தேன். நான் காவல் நிலையம் சென்று போலீசாரிடம் நான் சொல்ல அவர்கள் எழுதிக் கொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கி அனுப்பிவிட்டார்கள்.

நான் சொல்வது போல், சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எனது மகள் அச்சம்புதூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்ததால் எனது மகனுக்கு பாத்தியப்பட்ட வீட்டில் பக்கத்தில் உள்ள பொதுக் கோடியில் அவர்களுடைய செல்வாக்கை பயன்படுத்தி ஒவ்வொரு முறையும் புகார் கொடுக்கப்பட்டு, எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்பு அந்த கோடியில் நான் சுவர் கட்டி மாடிப்படி அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் 2015 ஆம் ஆண்டு எனது மகள் மீது போடப்பட்ட சிவில் வழக்கை வாபஸ் பெற வேண்டி காவல் நிலையத்தில் எனது மகள் செல்வாக்கை பயன்படுத்தி பின் யோசனையின்பேரில் 2016 ஆம் ஆண்டு ஒரு பொய் புகாரை கொடுக்க வைத்து எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல நான் அந்த பொய் வழக்குக்கு அனுசரணையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.10.13 12:35:31 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai